**தலைப்பு 282 – நீர்ப்பாசனத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களுக்கான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர்ப்பாசன திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்பு செய்யப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 27 செலவின விடயங்களுக்கான மொத்தம் ரூபா 8,993.71 மில்லியனிற்கான ஒதுக்கீடு செய்து கொடுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு முடிவடையும் போது அதில் ரூபா 5,968.86 மில்லியனிற்காக ஒதுக்கீடு பாவனை செய்யப்பட்டிருந்தது. அதன்படி செய்து கொடுக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 15 முதல் நூற்றுக்கு 100 வரையிலான வீச்சில் ஒதுக்கீடு மிகுதியாகி இருந்தது. | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு பாவனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் சரியாக மதிப்பீடு தயாரிக்க வேண்டியமை. | ஏற்றுக்கொள்கிறேன். ஏதிர் பார்த்த செலவீனம் நடக்காமை, போதியளவு கட்டுநிதி கிடைக்காமை, வெற்றிட பதவிகளுக்காக புது ஆட் சேர்ப்பு செய்யாமை, நிதி குத்தகை ஏற்பாடுகளுக்கமைய கொள்வனவு செய்தல் போன்ற காரணிகளின் தாக்கல். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய செலவின கூற்றில் மூலதன சொத்துக்கள் வருடத்தினுள் கைப்பற்றிக் கொள்ளலின் பெறுமானம் ரூபா 5,963,531,356 ஆக | சொத்துக்களுக்கான பெறுமானம் கணக்கிலிடப்படுவதை சரியாக செய்யப்பட வேண்டியமை. | திறைசேரியின் ஆலோசனைப்படி 2018 வருடம் மே மாதம் வரை கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் நிரந்தர சொத்துக்களுக்கான பட்டியலில் ஆரம்ப |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்த போதிலும் நிதிசார சொத்துக்களுக்கான கூற்றில் மூலதன சொத்துக்கள் கைப்பற்றிக் கொள்ளலின் பெறுமானம் ரூபா 4,873,554,230 ஆக காட்டப்பட்டதினால் ரூபா 1,089,977,126 க்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | மிகுதியாக கணக்கிலிடப்பட்டது. இதனால் நிகழ்ச்சித் திட்டத்தின் படி செலவின கூற்றில் வருடத்தினுள் மூலதன சொத்துக்களை கைப்பற்றிக் கொள்ளலின் பெறுமானம் மற்றும் நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றில் மூலதன சொத்துக்களை கைப்பற்றிக் கொள்ளலாக காட்டப்பட்டுள்ள பெறுமானத்தோடு ஒப்பீடாகாமையை ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றில் மீளாய்வு வருடத்திற்கான ஆரம்ப செலவு மற்றும் உபகரணங்களின் பெறுமானம் ரூபா 35,044,134,234 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் நிதிநிலைக்கான கூற்றில் அத்திகதிக்கான சொத்துக்களின் செலவினம் மற்றும் உபகரணங்களின் பெறுமானம் ரூபா 24,185,806,846 ஆக காட்டப்பட்டிருந்தமையினால் ரூபா 10,858,327,388 க்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சொத்துக்களை கணக்கிலிடுகையில் ஆரம்ப மிகுதியை சரியாக குறிப்பிடப்பட வேண்டியமை. | அரசாங்க கணக்கீட்டு திணைக்களத்தின் ஆலோசனைப்படி 2018 மே 31 ஆந் திகதி ஆகும் போது நீர்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களில் அதிகளவிலான சொத்துக்களை மதிப்பீடு செய்து ஆரம்ப மிகுதியாக அவ்வருடத்தினுள் கணக்கிலிடப்பட்டது. அதன்படி 2018 மே 31 திகதி முதல் 2018 திசெம்பர் 31 வரை மதிப்பீடு செய்து ஆரம்ப மிகுதியாக கணக்கிலிடப்பட்ட முழுப்பெறுமானம் ரூபா 35,044,134,234 ஆகும். மதிப்பீடு செய்யப்பட்ட இந்த பெறுமான கணக்கை CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் ஆரம்ப மிகுதியாக உட்படுத்தப்பட்டது. |

### 1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குக்கான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முழுத் தொகை ரூபா 518,296,185 ஆனதுடன் அதில் அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் பணம் ரூபா 23,767,567 ஆகும். மேலும் மாற்றலாகி சென்ற உத்தியோகத்தர்களின் சேவையை விற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் மற்றும் சேவையை இடை நிறுத்தம் செய்த உத்தியோகத்தர்களின் அறவீடு நிறுத்தப்பட்டு நிலுவையாக இருந்த கடன் பணம் 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களுக்கு நேரொத்த 2018 ஆம் வருடம் அதிகரித்துள்ளமை காரணமாக அக்கடன்களை மீள அறவிடப்படுவதற்கான முன்னேற்றம் மோசமான மட்டத்தில் இருந்தது. | நிலுவைக்கடன் மிகுதிகளை துரிதமாக அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2019 வருடம் மே மாதம் வரை அந்த நிலுவைக் கடன் மிகுதிகளின் அறவீடு ரூபா 9,237,173 ஆவதுடன் அது நிலுவைக் கடன் அறவீட்டின் விகிதாசாரம் நூற்றுக்கு 39 அண்மித்துள்ளது. அக்கடன் மிகுதிகளை அறவிடும் செயற்பாடுகள் மீது 2019 வருடம் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | தாபனக்கோவையின் XXIVஅத்தியாயத்தின் 4.4 பந்தியின் படி பெற்றுக்கொள்ளப்பட்ட கடனினை முழுமையாக அறவிடப்படுவதற்கு முன் உத்தியோகத்தரொருவர் இறந்து போனால் அவரிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய சகல கடன் பணமும் அவருடைய உரிமையாளருக்கு கொடுக்கப்பட வேண்டிய எந்தப் பணத்திலிருந்தும் கழித்துக் கொள்ளும் படி ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திடம் உடன் கோரப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 | தாபனக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.4 பந்தியின் படி செயல்பட வேண்டியமை. | 05 வருடங்களுக்கு மேலான 02 உத்தியோகத்தர்களின் இறப்பு பணிக்கொடையை தயாரிப்பதற்காக ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இரு உத்தியோத்தினரது இறப்பு பணிக்கொடை தயாரிப்பதற்கு வேண்டிய தகவல்கள் வலய காரியாலயம் மற்றும் பிராந்திய காரியாலயத்திலிருந்து வரவழைத்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஏனைய உத்தியோகத்தர்களின் |

| | | |
|---|---|---|
| ஆந் திகதி வரை இறந்து போன 24 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,912,946 ற்கான கடன் பணம் சம்பந்தமாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. அதில் 04 கடன் காரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 372,094 க்கான கடன் பணம் 05 வருடங்களுக்கும் மேலானவையாகும். | | ஓய்வூதிய சம்பளம் தயாரிப்பதற்கான சேவைகள் ஓய்வூதியம் தயாரிப்பதில் பிரச்சினை எழுந்துள்ள கடன் மிகுதி அறவிடப்படவுள்ள மற்றைய உத்தியோத்தரின் ஓய்வூதியம் தயாரிக்கும் அலுவல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. |

### 1.6.4 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது வைப்புக் கணக்கிலுள்ள ரூபா 1,495,013 க்கான பொது வைப்புக்கு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் அவ்வைப்பு, நிதிப்பிரமாணம் 570 பிரகாரம் வருமானத்திற்கு சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியாகியுள்ள வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 570 பிரகாரம் செயல்பட வேண்டியமை. | செயல்படுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னாள் அரசாங்க வருமானத்தில் வரவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.5 கட்டுநிதி மிகுதி

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கட்டுநிதி சம்பந்தப்பட்ட 2017 ஆம் வருடம் முதல் இருந்து வரும் ரூபா 2,495,604 க்கான மிகுதி தீர்த்து வைக்கப்படாது உள்ளது. | கட்டுநிதி மிகுதியை சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 2,495,604.00 க்கான மிகுதி திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணம் அல்லாததுடன் 658 ஆம் இலக்க வழங்குத் தீர்ப்பின் படி காலி மாவட்ட நீதிமன்றத்தினால் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் 7042385 இலக்க கணக்கிலிருந்து பெற்றுக் கொண்டு மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட பணமாகும். இப்பணம் திறைசேரி அச்சுக் குறிப்புக்களில் செலுத்தப்படாத கட்டுநிதியாகவும் காட்டப்பட்டுள்ளமையால் நிதி நிலைக்கான கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் கட்டுநிதி மிகுதியாக காட்டப்பட்டுள்ளது. |

**1.6.6 மிகைச் செலவு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களம் நிதி செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்காவிடினும் நிதி செயல்பாடுகளுக்கான செலவினமாக ரூபா 46,756,782 காட்டப்பட்டிருந்தது. | கணக்கு வைப்புக்கள் சரியாக செய்ய வேண்டியமை. | இப்பணம் பொது வைப்புக்கான பெறுவனவுகளினதும் செலுத்தல்களினதும் வேறுபாடு மூலம் தயார் செய்யப்பட்டுள்ளது. காசு பாச்சல் கூற்றில் நிதிச் செயல்பாடுகளிலிருந்து உண்டான காசுபாய்ச்சல் (அ) கீழ் காட்டப்பட்டுள்ளது. |

**1.6.7 பத்திரங்கள் மற்றும் ஏடுகள் பேணாமை**

திணைக்களத்தினால் கீழ் காணும் சில பத்திரங்கள் பேணப்படாததுடன் இற்றும் சில பத்திரங்கள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாமை மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) நிலையான சொத்துக்கான பத்திரம்** | | |
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி மற்றும் நிதிப்பிரமாணம் 502 (2) பிரகாரம் அதில் 11 ஆவது அத்தியாயத்தின் படி நிலையான சொத்துக்களுக்கான பத்திரம் பேணப்படவில்லை. | சுற்று நிரூபத்தின் படி நிலையான சொத்துக்களுக்கான பத்திரம் தொடர்புள்ளதாக கணக்காய்வாளர் அதிபதியின் உடன்பாட்டுடன் பேணப்படுதல் வேண்டும். | சிகாஸ் நிகழ்ச்சி திட்டத்தினுள் 2018 ஆம் வருடம் வரையில் இருந்த நிலையான சொத்துக்களுக்கான சம்பந்தப்பட்ட பத்திரங்கள் மற்றும் கணினி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்களுக்கான பத்திரங்கள் இப்போதைக்கு தயாரித்து முடிக்கப்பட்டுள்ளன. |
| **(ஆ) கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென் பொருட்களுக்கான நிலையான சொத்துக்களுக்கான பத்திரம்** | | |
| 2002 நமம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் | சுற்று நிருபனத்திற்கு அமைவாக கணினி | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| இலக்க திறைசேரி சுற்று நிருபத்தின் படி கணினி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென் பொருட்களுக்கான நிலையான சொத்துக்களுக்கான பத்திரம் பேணப்படவில்லை. | உதிரிப்பாகங்கள் மற்றும் மென் பொருட்களுக்கான பத்திரம் பேணப்படுதல் வேண்டும். | |
| **(இ) பிணைப்பத்திரம்** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் தகவல்கள் உட்படுத்தப்பட்ட பிணைப்பத்திரமொன்று தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளாகும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களுக்கான பிணைப்பத்திரம் பேணப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் வருடம் முதல் பேணப்படுலதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(ஈ) எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் தொகை புத்தகம்** | | |
| நிதிப்பிரமாணம் 1647 (ஈ) பிரகாரம் எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய்கான தொகைப் புத்தகம் பேணப்படாது இருந்தது. | நிதிப்பிரமாணம் 1647 (ஈ) பிரகாரம் எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய்க்கான தொகைப் புத்தகம் பேணப்பட வேண்டியமை. | - மேற்படி - |

### 1.6.8 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய கணக்காய்வு உத்தியோகத்தரினால் கீழேயுள்ள விடயம் சம்பந்தமாக உறுதிப்படுத்தல் செய்ய வேண்டி இருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்துப் பேணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்க | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் படி செயற்பட வேண்டியமை. | 2019 யூலை 01 ஆந் திகதியிலிருந்து திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான ஆக்கபூர்வான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணப்படுவதற்காக பிரதான காரியாலய நீர்ப்பாசன பொறியியலாளர்களிடம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த |

| | |
|---|---|
| பூர்வத்தன்மைக்கமைய காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையைப் பயன் தரும் வகையில் கொண்டு வருவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியதுடன் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று செய்யப்பட்டதற்கான கூற்று மீளாய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பொறுப்புக்கள் கணக்காளர்களிடம் கையளிக்கப்பட்டன. மேலும் பிராந்திய காரியாலயங்களின் நிதிக் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரிப்பதற்காக புதிய கணக்காளர் 16 பேரினை சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

### 1.6.9 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிகளுக்கான கணக்காய்வு ஆராய்வுகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டதிட்ட மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

**அவதானிப்புக்கள்**

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபனக் கோவை | | | |
| (i) XIX ஆம் அத்தியாயம் 6.13.1 மற்றும் 7.1 பிரிவு | அரசாங்க வீடுகளை பாவனை செய்த உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறும் போது, மாற்றலாகி அல்லது சேவையை விட்டுச் செல்லும் போது அந்த உத்தியோக பூர்வ வீட்டை ஒதுக்கித் தரப்பட்ட அதிகாரிகளிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 16 உத்தியோகபூர்வ வீடுகள் அவ்வாறு ஒப்படைக்கப் | தாபனக் கோவையின் XIX பிரிவுக்கமைய செயல்பட வேண்டியமை. | உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்று செல்கையில் மற்றும் மாற்றலாகி செல்கையில் உத்தியோகபூர்வ வீட்டினை ஒப்படைக்காமை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அது பற்றிய விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | XXIV ஆம் அத்தியாய 3.18.1 பிரிவு | சம்பளமற்ற விடுமுறை வழங்குவதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டி இருந்த போதிலும் வெளிநாடு சென்ற ஓர் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 119,440 க்கான கடன் சம்பந்தமாக அவ்வாறு செயல்பட்டிருக்கவில்லை. | தாபனக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 3.18.1 பிரிவுக்கு அமைவாக செயல்பட வேண்டியமை. | இப்போதைக்கு வெளிநாடு சென்றிருக்கும் திரு. கே.ஆர்.டீ.கமகேயிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 119,440 பணத்தை பெற்றுத் தரும்படி தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (iii) | XXIV ஆவது அத்தியாயத்தின் 4.4 பிரிவு | ஓய்வு பெற்றுச் சென்ற 179 உத்தியோகத்தர் களிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய கடன் பணம் ரூபா 15,833,988 ஆக இருந்ததுடன் அது சம்பந்தமாக தாபனக் கோவையின்படி செயற்பட்டிருக்கவில்லை. இவர்களுள் 13 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 951,962 க்கான கடன் பணம் 05 வருடங்களுக்கும் மேலான பழைய கடன் பணமாகும். | தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 பிரிவின் படி செயற்பட வேண்டியமை. | 2019 வருடம் ரூபா 6,150,662.23 க்கான கடன் மிகுதி அறவிடப்பட்டுள்ளது. அவ்அறவிடுதல் ஓய்வு பெற்றுச் சென்ற மொத்த உத்தியோகத்தர்களின் கடன் மிகுதியில் 1/3 க்கும் அதிக அளவாகும். இரண்டாம் காலாண்டுக்குள் இதனை மேலும் அதிகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ஆ) | தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 118 ஆம் இலக்க மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய சுற்றறிக்கை | இடம்மாறிச் சென்று இரண்டு மாதங்களுக்குள் அவர்களினது கடன் மிகுதிகள் சரிப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைக் எடுக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திற்கு வெளியில் மாற்றலாகிச் சென்ற 07 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,017,262 க்கான கடன் பணம் சம்பந்தமாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை . | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டியமை | திணைக்களத்திற்கு வெளியில் அமைச்சு / திணைக்களங்களுக்கு மாற்றலாகி சென்ற உத்தியோத்தர்களினது கடன் மிகுதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

## 1.6.10 மோசடி சாயலிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உஷ்கல சியம்பலாங்கமுவ வாவியிலிருந்து மஹஹகல்கமுவ வாவி வரையிலான நீரேந்து கால்வாயை நிமாணிக்கும் போது இயந்திர சாதனங்கள் விநியோகிப்பவர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இயந்திர சாதனங்கள் விநியோகிக்கும் ஒப்பந்த காலம் முடியுமுன் அவ்வொப்பந்தத்தை இரத்துச் செய்து விட்டு கூடிய விலையின் கீழ் அவ்வியந்திர சாதன விநியோகஸ்தர்களுடனேயே புதிய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டதன் பயனாக ரூபா 1,162,110 க்கான இழப்பு ஏற்பட்டுள்ளது, | ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தினை இரத்து செய்வதற்கு தேவையான வேண்டுகோள் மற்றும் அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டியமை மற்றும் ஏற்பட்டுள்ள இழப்பினை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல். | உஷ்கல சியபலன்கமுவ நீரேந்து கால்வாயினை நிர்மாணிப்பதற்காக 2015 ஆம் வருடம் பதிவு செய்துக்கொள்ளப்பட்டிருந்த இயந்திர சாதன விநியோகஸ்தர்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் எரிபொருள் விலை, இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் இயந்திர விலைகள் அதிகளவில் அதிகரித்தமையினால் அவ்விலை மனுக்களின் கீழ் தொடர்ந்தும் இயந்திர சாதனங்கள் விநியோகிப்பது இயலாதுள்ளதாக அவ்விநியோகத்தர்களினால் தெரிவிக்கப்பட்டன. ஆகையால் கல்கமுவ பிராந்திய பொறியியலாளர் போன்று குருநாகல் வலய ஏனைய கோட்ட நீர்ப்பாசன பொறியியலாளர்களாலும் புதிய விலை மனுக்களை அங்கீகரித்து தரும் படி குருநாகல் நீர்ப்பாசன பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி 2016 ஆம் வருடம் புது மனுக்களை குருநாகல் நீர்ப்பாசன பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டு தந்திருப்பதுடன் அப்புதிய விலை மனுக்களின் கீழ் புதிய ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு கல்கமுவ நீர்ப்பாசன பொறியியலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். அதன்படி பழைய ஒப்பந்தத்தின் கீழ் நாட்கள் மற்றும் மணித்தியாலக் கணக்குகள் எஞ்சி இருந்தாலும் கூட அவைகள் இரத்துச் செய்யப்பட்டு புதிய ஒப்பந்தம் அமுலில் உள்ளது. மேற்படி |

காரணிகளால் பழைய ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளதை தயவு கூர்ந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீடு தயாரிக்கும் போது தேவைப்பாடுகளை இனங்காணாது ஒதுக்கீடு செய்தல் மற்றும் திட்டமிட்டபடி செயல்படாமை ஆகிய காரணிகளால் 25 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிலுருந்த தேறிய ஒதுக்கீடான ரூபா 13,749,346,000 இல் ரூபா 3,416,502,624 க்கான ஒதுக்கீடு மிகுதியாகி இருந்தது. அம்மிகுதி ஒதுக்கிய ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 06 முதல் நூற்றுக்கு 59 வரையிலான வீச்சு கொண்டிருந்தது. | கட்டுநிதி பெற்றுக்கொள்ளும் முன் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கிறேன். முன்னாள் மதிப்பீட்டுக்கு ஏற்றவாறு ஒதுக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | ஒதுக்கீட்டு தேவையினை முறையாக இனங்காணாது செலவின விடயங்களுக்கிடையில் ஒதுக்கல்களை மாற்றப்படுவதன் மூலம் இரண்டு அன்றாட செலவின விடயங்களுக்காக வேறு செலவின விடயங்களிலிருந்து மாற்றப்பட்ட ரூபா 1,015,000 க்கான முழு மாற்றலினை சேமிக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கீட்டு தேவையினை சரியாக இனங்காணப்பட்டு நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 பிரகாரம் மாற்றல்கள் செய்யப்பட வேண்டியமை. | எதிர்ப்பார்க்கப்பட்ட சொத்துக்களுக்கான கடன் விண்ணப்ப பத்திர அளவு வருடத்தினுள் கிடைக்காமை மற்றும் கட்டுநிதி போதாமையினால் செலவினம் செய்யப்படாமை ஆகிய காரணிகளினால் ஓர் அளவிலான ஒதுக்கீடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | மூலதன செலவினங்களில் காணிகள் மற்றும் காணிகளை சீராக்குவதற்காக குறைநிரப்பு மதிப்பீட்டிலிருந்து | ஒதுக்கீடுகளை பெற்றுக் கொள்வதற்கு முன் சரியாக திட்டங்களை தயாரித்து | யான் ஓயா திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு சேமிக்கப்பட்டிருக்கிறது. வருடத்தினுள் போதியளவு கட்டுநிதி கிடைத்திருந்தால் இந்த ரூபா 500 |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 500,000,000 க்கான மொத்த தேறிய ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடுகளை தயாரிக்க வேண்டியமை. | மில்லியனுக்கான மேலதிக ஒதுக்கீட்டின் அளவு மிகுதியாகி இருக்காது என்பதனை தயவுகூர்ந்து தெரிவிக்கின்றேன். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94 (i) பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் அதற்கான ஒதுக்கீடு இருந்தால் ஒழிய ஒரு அலுவல் அல்லது ஒரு சேவை அல்லது ஒரு நிரம்பலுக்காக எவ்வித செலவினத்துடன் அல்லது தொடர்புடன் இணையாது இருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டை மீறி ரூபா 20,578,773 க்கான தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 94 (i) பிரகாரம் செயல்பட வேண்டியமை | ஏற்றுக்கொள்கிறேன். முன்னாள் இது போன்று குறைபாடுகள் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்வதுடன் சகல வலய காரியாலயத்திற்கும் இது பற்றி அறிவுறுத்தப்படும் கடிதமொன்று தயாரிக்கப்பட்டு அனுப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. |

**2.3 முற்பணம் செலுத்தலும் சரிப்படுத்தலும்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தில் 7 உத்தியோகத்தர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 200,029 க்கான சம்பந்தப்பட்ட அலுவலுக்கான உபகட்டு நிதியை சரிப்படுத்துவதற்கு முற்பணம் பெறப்பட்ட அலுவல் முடிவுற்று 03 மாதம் முதல் 08 மாதம் வரையிலான காலம் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | முற்பணம் செலுத்தப்பட்ட அலுவல் முடிவடைந்ததுடன் முற்பணம் சரிப்படுத்த வேண்டியமை | ஏற்றுக்கொள்கிறேன். முன்னால் இது போன்று குறைபாடுகள் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்வதுடன் சகல வலய காரியாலயங்களுக்கும் சம்பந்தப்பட்ட உப கட்டுநிதி சரிப்படுத்துவதில் நிதிப் பிரமாணத்திற்கு அமைய செயல்பட வேண்டியுள்ளதாக அறுவுறுத்தி ஆலோசனைக் கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.4 வங்கிக் கணக்கு நடவடிக்கை**

வங்கி கணக்கு நடவடிக்கை சம்பந்தமாக செய்யப்பட்ட மாதிரிக் கணக்காய்வு பரிசோதனையில் வெளியான குறைபாடுகள் கீழே காணப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 04 வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்களினால் பராமரிக்கப்படும் 04 வங்கிக் கணக்குகளில் ரூபா 7,932,630 க்கான மிகுதி இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 முதல் 2019 ஏப்ரல் வரை இக்கணக்குகள் செயலிழந்து இருந்தன. | செயல் இழந்துள்ள கணக்குகளை மூடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இக்கணக்குகளை மூடுவதற்கு வங்கியிலிருந்து தேவையான உறுதிக்கடிதம் பெற்றுக்கொள்வதற்கான கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அக்கடிதம் கிடைத்தவுடன் வங்கிக் கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) 11 வங்கிக் கணக்குகளின் தகவல்கள் நிலை அறிக்கையில் உட்படுத்தப்படவில்லை. | நடைமுறையில் உள்ள சகல கணக்குகளினதும் தகவல்கள் நிலை அறிக்கையில் உட்படுத்தப்பட வேண்டியமை. | இக்கணக்கு டீ.எஸ்.டபிள்யூ.ஆர்.பி மற்றும் CRIP திட்டங்களுடன் சம்பந்தப்பட்ட திட்டக் கணக்கு ஆகையினால் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்படவில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 கடமையினை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட கொடிகமுவ திட்டத்திற்காக 2018 ஆம் வருடம் ரூபா 25 மில்லியனுக்கான ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவ் ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா 22 மில்லியன் அப் பொறுப்புக்கு செலவிடப்படாது வேறொரு செலவின விடயத்துக்கு மாற்றப்பட்டு இருந்ததுடன் வேலைத் தளத்திற்கு நுழை பாதை மட்டும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பெறப்பட்ட ஒதுக்கீடு அச்செயலுக்காக ஈடுபடுத்த வேண்டியமை | சூழல் அறிக்கை கிடைக்காமையின் காரணமாக திட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்கான அனுமதி கிடைக்காததுடன் தற்காலிக நுழை பாதையை நிர்மாணிப்பதற்கு மாத்திரம் அனுமதி கிடைத்திருந்தது. அதன்படி திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 25 மில்லியன் இல் ரூபா 22 மில்லியன் யான் ஓயா திட்டத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

### 3.2 திட்டங்களை செயல்படுத்துவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மஹகல்கமுவ நீரேந்து கால்வாயை நிர்மாணிக்கும் திட்டத்தின் மற்றும் தேதறு ஓயா நீர்த்தேக்கத்தினை நிர்மாணிக்கும் திட்டத்தின் நிர்மாணப்பணிகள் 2014 ஆம் வருடம் முடியும் போது முடிவிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு முடிந்தும் அவைகளை முடிப்பதற்கு திணைக்களம் செயல்பட்டிருக்கவில்லை. | ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் திட்டமிடப்பட்ட தினத்தில் முடிக்க வேண்டியமை. | தேதறு ஓயா திட்டத்தினை அமைச்சரவை தீர்மானத்தின்படி 2018 இறுதி வரை பிற்போடப்பட்டுள்ளது. மேலும் திட்டத்தின் நஷ்ட ஈடு வழங்கும் வேலை மற்றும் செங்கல் ஓயா திட்டத்தின் வேலைகள் இன்னும் நிலுவையில் உள்ளமையால் இக்கால கட்டத்தினை 2019 யூன் 30 வரை பிற்போடுவதற்கு அனுமதி தரும்படி கோரி நீர்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.<br>பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட நடைமுறை நிலைமையின் காரணமாய் திட்ட வடிவமைப்பினை மாற்றுவதற்கு நேர்ந்தமையும் திட்டத்திற்கு தேவையான காணிகளை சுவீகரிப்பது சம்பந்தமாக உருவான பிரச்சினைகள் ஆகியன திட்டத்தினை தாமதப்படுத்துவதற்கு நேரடியான தாக்கத்தினை உண்டுபண்ணியுள்ளன. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்திற்கு சொந்தமான 42 வாகனங்கள் வெளித்தரப்பினருக்கு கொடுக்கப் பட்டிருந்தன. | வெளித்தரப்பினருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வாகனங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது அந்நிறுவனங்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 04 வாகனங்களை பாவனையிலிருந்து நீக்குவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இரு வாகனங்களை மீண்டும் திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் 34 வாகனங்களை அமைச்சுக்கு கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 07 அரச நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 332,950,000 ஆன 89 வாகனங்கள் மற்றும் ரூபா 270,000 ஆன 27 மோட்டார் சைக்கிள்கள் சுவீகரிக்கப்படாது பாவனை செய்யப்பட்டள்ளன. | வெளி நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை சுவீகரித்துக் கொள்வதற்கு அல்லது மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 04 வாகனங்களை அதிகரித்தக் கொள்வதற்கான அலுவல் முடிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய வாகனங்களை சுவீகரித்துக் கொள்வதற்கான அலுவல் நடைபெற்று வருகிறது. |

## 3.4 நட்டங்களும் இழப்புக்களும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நட்டங்கள் மற்றும் இழப்புக்களுக்கு அமைவாக ரூபா 23,631,882 க்கான 46 நட்டங்களும் இழப்புக்களும் நடந்து 2 வருடம் முதல் 18 வருடங்கள் வரையிலான காலம் கடந்துள்ள போதிலும், அவைகளை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 பிரகாரம் செயல்பட வேண்டியமை. | இரண்டு நட்டம் மற்றும் இழப்புக்களை ஏட்டிலிருந்து தள்ளுபடி செய்வதற்கு அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு 06 நட்டங்களை சம்பளத்திலிருந்து மற்றும் ஓய்வூதியத்திலிருந்தும் அறவிடுவதற்கு 16 சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கவும் மற்றும் 22 ஏட்டிலிருந்து தள்ளுபடி செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) குருநாகல் வலய நீர்ப்பாசன பணிப்பாளர் காரியாலயம் அனுமதிக்கப்பட்டிருந்த விலைமனுக்கள் மீதான வரிசைப்படுத்தலை கவனத்தில் கொள்ளாது கல்கமுவ பிராந்திய இயந்திர விநியோகத்தர்களோடு அதிகவிலை மனுக்களின் | அதிக விலை மனுக்களின் கீழ் ஒப்பந்தத்திற்கு உள்ளானமை குறித்து பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களுக்கு எதிராக முறையான | குருநாகல் வலய நீர்ப்பாசன பணிப்பாளர் காரியாலயத்தினால் விலைமனு வரிசைப்படுத்தல் பட்டியலொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டவர்களுக்கு இயந்திரம் வழங்கும்படி கல்கமுவ நீர்ப்பாசன |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் 14 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும், மதிப்பீட்டுக்குள்ளான இயந்திர மணி நேரத்தினை மீறி 8012 இயந்திர மணி நேரத்தினை பாவனை செய்வதற்காக 19 இயந்திர விநியோகத்தர்களோடு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பொறியியலாளர் அறிவித்திருந்த போதிலும், அவர்களின் இயந்திர சாதனங்கள் வெவ்வேறு இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை மற்றும் பல்வேறு காரணிகளால் அவர்கள் இயந்திரம் வழங்கவில்லை. இதனால் பட்டியலில் அடுத்துள்ள விநியோகத்தர்களோடு குருநாகல் நீர்ப்பாசன காரியாலயத்தால் அனுமதிக்கப்பட்ட விலைமனுக்களின் கீழ் அவர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. மதிப்பீட்டுக்குள்ளான இயந்திர மணி நேரத்தினை மீறப்பட்டு இயந்திரங்களை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | தெருருஓயா நீர்த்தேக்க திட்டம்<br>------------------------------------------------ | | |
| (i) | நீர் மின்சார உற்பத்தி நிலையமொன்றை அமைப்பதற்கு தேவையான சுரங்கப் பாதை அமைத்தாலும் மின் உற்பத்தி இயந்திரம் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நீர்த்தேக்கம் அமைப்பதை திட்டமிடுகையில் சாத்திய வளக் கூற்றினை பற்றி கவனம் செலுத்தாது நீர்த்தேக்க வேலைகளை ஆரம்பித்ததைப் பற்றி முறையாகத் தேடிப்பார்க்க வேண்டும். | நீர் மின்சார நிலையம் தாபிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | நீர்த்தேக்க எல்லையினை பிரிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த எல்லைக் கம்பங்கள் பாவனை செய்யப்படாது ஒதுக்கப்பட்டிருந்தன. | கொள்வனவு செய்யப்பட்ட எல்லைக் கம்பங்கள் தேவைக்கேற்ப பாவனை செய்யப்பட வேண்டியமை | கொள்வனவு செய்யப்பட்டிருக்கும் எல்லைக் கம்பங்கள் முன்னால் பாவனைக்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | கால்வாய் பாதையினை நிர்மாணிக்கும் போது | நேரக்கூடிய இழப்பினை | கால்வாய் பாதை அமைப்பதற்காக மண்ணினை |

| | | | |
|---|---|---|---|
| | அப்புறுப்படுத்தப்பட்ட கருங்கற் பாறைகள் மற்றும் மண் கால்வாய் ஓரமாக குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அவை கால்வாயினுள் சரிந்து விழுந்தமையினால் கால்வாய் நீர் பாய்ந்தோடும் பாதையில் நாணல் போன்ற பயிர்கள் வளர்ந்திருந்தன. மேலும் கால்வாய் இருபுறத்திலும் முறையாக சீர்செய்யப்பட்டு புற் திடல்கள் பிடிக்கப்பட்டிருக்கவில்லை. | குறைத்துக் கொண்டு திட்டமிட்டப்படி கால்வாய் இருபுறத்தையும் செப்பனிட்டு கெள்ளல். | வெட்டி எடுக்கும் பொது அப்புறப்படுத்தப்பட்ட கல், மண் ஆகியவற்றை இடுவதற்காக 5 கி.மீ இற்குள் இருக்கும் விளையாட்டு மைதானம், சீராக்க வேண்டிய பாதைகள் பயன்படுத்தப்பட்டதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட காணிகளிலும் ஓர் அளவு இடப்பட்டது. ஆயினும், பிரதேச மக்களின் எதிர்ப்புக் காரணமாக அவ்வாறு இடமுடியாமற் போன ஓர் அளவிலான மண்ணினை கால்வாய்க்கரை இருபுறம் நெடுகிலும் மெல்லியதாக இடப்பட்டு பாதை அமைத்து கொடுக்கப்பட்டது. அவ்வேளை சிறிதளவு மண் கால்வாயில் விழ வாய்ப்பிருப்பினும் அது நீர் பாய்ந்து செல்ல தடையாக இருப்பின் அதை செப்பனிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | கால்வாய்க்கு மேற்பகுதியில் மற்றும் ஏனைய இடங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கழுப்பற்றை (வுருசுகு) சரியான நியமங்களுக்கமைவாக நிர்மாணிக்கப்படாமையினால் நீர் ஒழுக்கலாகும் சந்தர்ப்பங்கள் மற்றும் கொங்கீறீட் கட்டு வெடித்துள்ள சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. | முறையாக நிர்மாணப் பணிகள் செய்யாத தரப்பினர் பற்றி தேடிக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை மற்றும் துரிதமாக செப்பனிட்டு இழப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டியமை | சம்பந்தப்பட்ட இடங்களை செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| (v) | தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தில் நீர் கொள்ளும் அளவினை மற்றும் ஒவ்வொரு மட்டத்திலும் நீரில் மூழ்கும் அளவினை பௌதீக வளம் மற்றும் நீர்த்தேக்கத்தின் ஒவ்வொரு இடங்களிலும் களஞ்சியப்படும் நீர்ல் | முறைப்படி செயலாற்றாமைக் கான காரணத்தை கண்டுபிடிக்கப் பட்டு நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஏற்படக்கூடிய | தெதுறு ஓயாவின் ஒவ்வொரு மட்டங்களிலும் நீர் கொள்ளும் அளவினை அளப்பதற்காக சதுர உட்கொள்ளலுக்கான குறிப்பேடு சாத்தியக்கூற்றில் தயாரிக்கப்பட்டுள்ளது. அது போன்றே நீர்த்தேக்கத்திற்கு உட்படும் பூமியின் |

| | | | |
|---|---|---|---|
| | பரப்பளவாக்கல், நீர்த்தேக்கச் சுற்றுப்புறத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் ஏற்படும் தாக்கம் சொத்துக்களுக்கு ஏற்படும் தாக்கத்தின் பெறுமானத்தை கணக்கிலிடுவதற்காக நீர்த்தேக்கத் அடிமட்டத்தின் அளவினை பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | இழப்பினை குறைத்துக் கொள்வதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அளவினை இனங்காண்பதற்கு நில அளவையாளர் திணைக்களத்தைக் கொண்டு வரைபடம் ஒன்று தயாரித்துக் கொண்டுள்ளதுடன் அவ்வரைபத்தின் படி ஆகக்கூடிய வெள்ள மட்டத்திலும் ஆகக்கூடிய நீரை வழங்கல் மட்டத்திலும் நீரில் மூழ்கும் பூமியின் அளவினை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) | சியம்பலாங்கடுவ வாவியில் இருந்து மககல்கமுவ வாவி வரை நீரேந்து கால்வாயை நிர்மாணிக்கையில் மதிப்பீடு செய்யப்பட்ட இயந்திர மணிக்கணக்கினை மீறப்பட்டு 9,926 இயந்திர மணி நேரம் பாவனை செய்வதற்காக இயந்திர விநியோகத்தர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருந்தது. | முறையாக ஆராயப்பட்டு காரணிகளை தேடிப்பார்த்தல் மற்றும் நேர்ந்துள்ள இழப்பினை மதிப்பீடு செய்யப்பட்டு அதை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முகாமைத்துவ அறிக்கையின் ஒரு பந்தியாகும். விடையளிப்பதற்கு இன்னும் காலம் இருக்கின்றது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| விவசாய மக்களினது பொருளாதார நிலையை உறுதிப்படுத்துவதற்காக முறையாக உருவாக்கப்பட்ட நீர்ப்பாசன முறைமையொன்றை ஏற்படுத்துதல் திணைக்களத்தின் பேணதகு அபிவிருத்தியின் நோக்கம். ஆனால் மழைக்காலத்தில் தெதுரு ஓயா நீர்த் தேக்கத்தில் சேரும் மேலதிக நீரினை தெதுரு ஓயாவுக்கு விடுவிப்பதற்கான நிர்மாணிக்கப்பட்டுள்ள 08 வாய்க்கால் கதவுகள் மூடப்பட்டிருந்த போதிலும், அக்கதவுகளுக்கிடையாக | குறைபாடுடன் நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கப்பட்ட கடனுக்கான உடன்கண்டு பிடிக்கப்பட்டு இழப்பினை குறைக்கப்பட வேண்டியமை. | ரேடியல் கதவுகளின் நீர் ஒழுக்கினை தடுப்பதற்காக இடப்பட்டிருக்கும் இறப்பர் பீடிங்களில்உள்ள குறைபாடு காரணமாக நீர் ஒழுக்கல் ஆவதுடன் அது நீர்த்தேக்கத்திலிருந்து தெதுரு ஓயாவுக்கு கட்டாயமாக விடுவிக்கப்பட வேண்டிய நீர் அளவினையும் விட குறைவாகும். இதனால் நீர் விரயம் ஏற்படாததுடன் இந்நீரினை வாவியின் ஊடாக மாகல்ல |

| | | |
|---|---|---|
| நீர்த்தேக்கை பாரிய இரைச்சலுடன் தெதுரு ஓயாவுக்கு பாய்ந்து செல்கிறது. அதன் காரணமாக ரூபா 12.342 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட தெதுறு ஓயா நீர்த் தேக்கத்தினுள் சேர்க்கப்படும் நீரு் கடலுக்கு பாய்ந்து சென்று கொண்டிருக்கின்றது. | | நீர்த்தேக்கத்தில் பாய்ந்து அதன் நீர்த்தேவையினை பூர்த்தி செய்யப்படுகிறது. எவ்வாறாயினும், ரேடியல் கதவுகளில் நீர் ஒழுக்கினை தடுப்பதற்கு இடப்பட்டிருக்கும் இறப்பர் பீடிங்களில் உள்ள குபைாடுகள் அந்நிர்மாணப் பணிகளை செய்த அரசாங்க தொழிற்சாலையினைக் கொண்டு சீராக்குவதற்கான நடவடிக்கை இப்போது எடுக்கப்படடு வருகிறது. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சிரேஷ்ட மட்டத்திலான 93 பதவிகள், மூன்றாம் மட்டத்திலான 138 பதவிகள், இரண்டாம் மட்டத்திலானா 637 பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்திலான 899 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காலியாக இருந்தன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை அல்லது மேலதிக பதவிகள் இருப்பின் அவைகள் மழுக்கடிக்கப்பட வேண்டும். | சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. 2019 வருடத்தினுள் இரண்டாம் மட்டத்திலான 100 உதவி தொழில்நுட்பவியலாளர் களுக்கு நியமனக் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) திணைக்களத்தில் சேவை செய்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர் மற்றும் 53 ஊழியர்களின் ஓய்வூதியம் தயாரிக்கப்படும் வேலை செய்யப்பட்டிருக்கவில்லை. மேற்படி ஓய்வூதியம் தயார் செய்யப்படாத 53 உத்தியோகத்தர்களில் 04 பேர் உத்தியோகபூர்வ இல்லங்களை கையளிக்கப்படாமையினால் ஓய்வூதியம் கணக்கிடப்பட்டு இருக்காததுடன் 45 வயதை தாண்டப்பட்டும் சேவைக்கு சேர்த்துக் கொள்ள பட்டமையினால் 05 பேர்களின் ஓய்வூதியம் | ஊழியர்களினது ஆவணக் கோவைகள் நாளதுவரையாக்கப் பட்டு பராமரிக்கப்பட வேண்டியதுடன் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் குறித்து தாபன விதிக் கோவை XIX அத்தியாயப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | ஓய்வு பெற்றுச் சென்ற 33 பேர்களினது ஆணைக்கோவை 2019 ஆகஸ்ட் 31 ஆகும் போது தயார் செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி ஆவணங்களை தயார் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

தயார்
செய்யப்பட்டிருக்கவில்லை.
விதவை மற்றும் அனாதை
பிள்ளைக்கான
இலக்கத்தை
பெற்றிருக்காமையினால் 03
ஊழியர்களின் ஓய்வூதியம்
தயாரிக்கப்பட்டிருக்க
வில்லை.